

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் திருப்பூர் மாவட்டம், அவிநாசி அரசு மருத்துவமனையில் தாய்வழி பச்சிளங்குழந்தைகளுக்கான சிகிச்சைப்பிரிவு கட்டடம் கட்டும் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாவட்டக் கழக செயலாளர்கள் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல. பத்மநாபன், வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் (கோவை மண்டலம்) எஸ்.காசிலிங்கம், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் கிருஷ்ணமூர்த்தி உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, கிளை கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு

# செஞ்சிக் கோட்டை சாதுல்லாக் கான் மசூதியில் முஸ்லீம்கள் சிறப்பு தொழுகை!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் பங்கேற்பு!

செஞ்சி, ஜூன் 18 - இஸ்லாமியர்களின் பண்டிகைகளில் ஒன்றான பக்ரீத் பண்டிகை ஆண்டு தோறும்கொண்டாடப்படுவது வழக்கம்.அந்த வகையில் தமிழகத்தில் நேற்று பக்ரீத்பண்டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டது.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சிக் கோட்டையில் உள்ள சாதுல்லா கான் மசூதியில் பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு முஸ்லீம்கள் நேற்று காலையில் சிறப்பு தொழுகை நடத்தினர்.

இதை முன்னிட்டு செஞ்சி பெரிய பள்ளிவாசலில் இருந்து முஸ்லீம்கள் ஊர்வலமாக செஞ்சி கூட்ரோட்டிற்குவருகை தந்தனர்.அங்கு செஞ்சி தாலுக்கா பள்ளிவாசல் ஜமாத்தலைவர் சையத் மஜித் பாபு பிறை கொடி ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து ஊர்வலமாக திருவண்ணாமலை சாலை வழியாக செஞ்சிக் கோட்டையில் உள்ள சாதுல்லா கான் மசூதியை அடைந்தனர். அங்கு காலை 8.30 மணிக்கு சிறப்பு தொழுகை நடந்தது. தொழுகையை ஷமீம் அக்தர் நடத்தினார் .

இதில் ரப்பானி வைத்தியசாலா டாக்டர் எஸ்.ஏ . சையத் சர்தார், பள்ளிவாசல் தலைவர்கள் திருவண்ணாமலை சாலை ஜப்பார் .பஸ் நிலையம் ஆதில் பாஷா,.எம்.ஜி.ஆர்.நகர் பாபு சாயபு..கவுன்சிலர் ஜான் பாஷா. முன்னாள் கவுண்சிலர்கள் சையத் பாபு. காஜா பாஷா,. ரப்பானி அசு துல்லா,சையத் ஆதம் , ஷிமார்ட் அஷ்ரப், சமியுல்லா ஷரிப், மாவட்ட பிரதிநிதி ஜே.எஸ்.சர்தார், முபாரக், ஷாஜஷான், ஷாஜி , ஷரிப் கலீல், சாதிக் உள்ளிட்ட ஏராமான முஸ்லீம் கள் சிறப்பு தொழுகையில் கலந்து கொண்டனர்.

இதேபோல் செஞ்சி செட்டிபாளையம் கொத்த மங்களம் சாலையில் உள்ள சத்கா மைதானத்தில் பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு காலை 8.30மணிக்கு சிறப்பு தொழுகை நடந்தது.

இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளி நாடுவாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர்செஞ்சி மஸ்தான்,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் மஸ்தான்,முன்னாள் நகர செயலாளர் காஜா நஜீர்உள்ளிட்ட ஏராளமான முஸ்லிம்கள் கலந்து கொண்டனர்.

பள்ளிவாசல் தலைவர்கள் சந்தை மேடு அனீப், கவுஸ் பாஷா தே சூர்பாட்டைஇப்ராஹிம், மதினா பள்ளிவாசல் சையத் அமீன், பக்ஷா பள்ளி வாசல் சிராஜ் உள்ளிட்ட ஏராளமான முஸ்லீம்கள் கலந்து கொண்டனர்.

இதே போல் அவலூர் பேட்டை, எதப்பட்டு ,வளத்தி ,கடலி, சொரத்தூர் ,மீனம்பூர், அப்பம் பட்டு ,அனந்தபுரம் ,ஆகிய பகுதிகளில் நடந்த பக்ரீத் பண்டிகை சிறப்பு தொழுகையில் ஏராளமான முஸ் லீம்கள் குழந்தைகள் கலந்து கொண்டு ஒருவருக்கு ஒருவர் கட்டித் தழுவி பக்ரீத் நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண் டனர்.

### கோவை நாடாளுமன்றத் தொகுதி

# பொதுமக்களுக்கு கணபதி ராஜ்குமார் எம்.பி. நன்றி தெரிவித்தார்!

## கோவை நா.கார்த்திக் - தொ.அ.ரவி தலைமையில் கழகக் கூட்டணியினர் பங்கேற்பு !

கோவை, ஜூன் 18 - கழகத் தலைவர், திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் அவர்களின் திமுக மற்றும் இந்தியா கூட்டணிக் கட்சிகளின் சார்பில், தமிழ்நாடு மற்றும் புதுவையில் 40/40 மாபெரும் வெற்றியைப் பெற்றதை முன்னிட்டு, கோவை நாடாளுமன்ற தொகுதி உறுப்பினராக வெற்றி பெற்ற கணபதி ராஜ்குமார் எம்.பி., 1,18,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதை முன்னிட்டு, மருதமலை மலைவாழ் குடியிருப்பில் வசிக்கும் பொதுமக்களை சந்தித்து, நன்றி தெரிவித்தார்.

பின்னர் மருதமலை அடிவாரத்தில் உள்ள வர்த்தகர்களை சந்தித்து நன்றி தெரிவித்தார்.

கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக், கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொஅ.ரவி,ஆகியோர் தலைமையில், இந்திய தேசிய காங்கிரஸ் செயல்தலைவர் மயூரா ஜெயக்குமார், சிபிஎம் மாவட்ட செயலாளர் சி.பத்மநாபன் மற்றும் சி.பி.ஐ., ம.தி.மு.க., வி,சி.க., கொ.ம.தே.க. உள்ளிட்ட இந்தியா கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்ற,

இந்த நிகழ்வில், வடவள்ளி பகுதி செயலாளர் வம.சண்முகசுந்தரம்,கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மறை, வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் அசோக் ஆறுக்குட்டி, பொதுக்குழு உறுப்பினர்கள் ச.குப்புச்சாமி, சரஸ்வதி புஷ்பராஜ், மாநகராட்சி மேற்கு மண்டல தலைவர் தெய்வயாணை தமிழ்மறை, வார்டு செயலாளர்கள் தெய்வம் மகாலட்சுமி, விஸ்வநாதன், வேலுச்சாமி, பாலகிருஷ்ணன், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ஆர்கே சுரேஷ்குமார், வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் தியாகு, இலக்கிய அணி அமைப்பாளர் ராஜ்குமார்,நெசவாளர் அணி அமைப்பாளர் வி. மணி,

மருதமலை அறங்காவலர் குழு உறுப்பினர் வி. மகேஷ்குமார், மருதமலை வெள்ளைச்சாமி, கவுன்சிலர்கள் லட்சுமி பாலகிருஷ்ணன், பத்மாவதி ரவிச்சந்திரன்,துணை அமைப்பாளர்கள் சந்தீப்,முரசொலி வெங்கிட கிரி, சதாசிவம், சின்ன தங்கம், வட்டக்கழக துணைச்செயலாளர் செல்வி, மதிமுக செந்தில்,தெய்வம் ஜெயசூர்யா, சின்னச்சாமி,

தி.மு.க.,இந்தியா கூட்டணிக் கட்சிகளின் மாவட்ட நிர்வாகிகள், அனைத்து நிர்வாகிகள், திமுக, இந்தியா கூட்டணி யின் செயல்வீரர்களும், தொண்டர்களும், திரளான பொதுமக்களும் பங்கேற்றனர்.

### திருப்பத்தூரில் மாமன்னர்கள்

# மருது பாண்டியர்கள் வெளியிட்ட ஜம்பு பிரகடனம் 223வது ஆண்டு!

## சிலைகளுக்கு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மாலை அணிவித்து மரியாதை!

சிவகங்கை, ஜூன் 18 - சிவகங்கை மாவட்டம் சிவகங்கையை தலைநகராக கொண்டு ஆட்சி செய்தவர்கள் மாமன்னர் மருது பாண்டியர்கள். நாட்டின் சுதந்திர போராட்டத்திற்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து போராடுவதற்கு 223 ஆண்டுகளுக்கு முன்பாக ஜூன் 16ம்தேதி ஸ்ரீரங்கத்தில் ஜம்புத் தீவு பிரகடனத்தை வெளியிட்டார்கள் . இந்த பிரகடனத்தின் மூலம் ஆங்கிலேயர்களை நாட்டை விட்டு வெளியேற்றவும் அதற்கான போராட்டத்திற்கு தயாராகவேண்டும் என்ற அறைகூவலை விடுத்தார்கள்.

அதை நினைவு கூரும் வகையில் 16ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை திருப்பத்தூரில் பஸ் நிலையம் எதிரில் உள்ள மாமன்னர் மருது பாண்டியர்கள் தூக்கிலிடப்பட்ட நினைவிடத்தில் ஜம்புத்தீவு பிரகடனத்தை வெளியிட்ட மாமன்னர் மருது பாண்டியர்களை நினைவுபடுத்தும் வகையில் அவர்களது நினைவிடம் மற்றும் மருது பாண்டியர் சிலைகளுக்கும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில். திருப்பத்தூர் பேரூர் கழக செயலாளர் ஆர்.கார்த்திகேயன், மாவட்ட மாணவரணி. அமைப்பாளர் கதி . ராஜ்குமார்,ஷாஷகான், மருது பாண்டியர் இளைஞர் பேரவை தலைவர் நந்தீஸ்வரன், செயலாளர் பூக்கடை பாண்டியன், திருப்பத்தூர் அகமுடையார் உறவு முறை சங்க பொருளாளர் சேகர் உட்பட ஏராளமானவர் கள் கலந்து கொண்டார்கள் . அமைச்சரிடம் செயலாளர் பூக்கடை பாண்டி மருதுபாண்டியர் நினைவிடத்தில் மேற்கூரை அமைத்து தருமாறு கோரிக்கை மனுவினை கொடுத்தார். அதை செய்து செய்வதாக உறுதி கூறினார்.



கோவை நாடாளுமன்ற தொகுதி உறுப்பினராக வெற்றி பெற்ற கணபதி ராஜ்குமார் எம்பி., அவர்கள், 1,18,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதை முன்னிட்டு, மருதமலை மலைவாழ் குடியிருப்பில் வசிக்கும் பொதுமக்களை சந்தித்து, நன்றி தெரிவித்தார். பின்னர் மருதமலை அடிவாரத்தில் உள்ள வர்த்தகர்களை சந்தித்து நன்றி தெரிவித்தார். கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா.கார்த்திக், கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொஅ.ரவி,ஆகியோர் தலைமையில், இந்திய தேசிய காங்கிரஸ் செயல்தலைவர் மயூரா ஜெயக்குமார், சிபிஎம் மாவட்ட செயலாளர் சி. பத்மநாபன் மற்றும் சி.பி.ஐ., ம.தி.மு.க., வி,சி.க., கொ.ம.தே.க. உள்ளிட்ட இந்தியா கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்ற, இந்த நிகழ்வில்,வடவள்ளி பகுதி செயலாளர் வம. சண்முகசுந்தரம்,கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மறை, வடக்கு மாவட்ட துணைச்செயலாளர் அசோக் ஆறுக்குட்டி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101 வது பிறந்தநாளையொட்டி ஈரோடு தெற்கு மாவட்டக் கழக வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் சி.முத்துக்குமார் ஏற்பாட்டில் கழக வழக்கறிஞர் அணி இணை செயலாளர் மா.சு.ராதாகிருஷ்ணன் தலைமையில் ஈரோடு திண்டல் மாற்றுத் திறனாளிகள் சிறப்பு பள்ளி மாணவர்களுக்கு 25,000 ரூபாய் மதிப்புள்ள மிக்ஸி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் மற்றும் அறுசுவை உணவினை தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், வீட்டு வசதி துறை அமைச்சருமான சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் மாவட்ட கழக துணை செயலாளர் ஆ.செந்தில்குமார் ஈரோடு மாநகரக் கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம், மாநில மாணவர் அணி துணை செயலாளர் வீரமணி ஜெயக்குமார் உள்ளிட்ட கழக மூத்த வழக்கறிஞர்கள், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், கழக வழக்கறிஞர்கள், கழக நிர்வாகிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர் ,

### கோவை சுப்பு நிகழ்ச்சி ஏற்பாட்டில் - மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா – புகைப்படக் கண்காட்சி!

## அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன்- ஆர்.எஸ்.பாரதி -நிவேதா எம்.முருகன் பங்கேற்பு!

மயிலாடுதுறை, ஜூன்18- மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா புகைப்பட கண்காட்சி மயிலாடுதுறை தருமபுரம் கல்லூரியில் இன்று (18.6.2024 - செய்வாய்க்கிழமை) காலை 10.00 மணிக்கு என் தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சியில் தொடங்கப் பட உள்ளது. 18ம் தேதி தொடங்கி 22ம் தேதி வரை 5 நாட்கள் கழகத்தினர், பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மணவிகள் பார்வையிடும் வகையில் புகைப்பட கலைஞர் கோவை சுப்பு தலைமையிலான குழுவினர்களால் உருவாக்கி தரப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா புகைப்படக் கண்காட்சி அரங்கத்தை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தொடங்கி வைத்தும்,

கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா புகைப்பட கண்காட்சியை, சுற்றுச் சூழல் கால நிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் திறந்து வைக்கிறார். இந் நிகழ்ச்சியில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நடாளுன்ற முன்னாள் உறுப்பினர், சட்ட மன்ற உறுப்பினர்கள், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகி கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. கூறியுள்ளார்.

### நிவேதா எம்.முருகன் தலைமை! ஞான.இமையநாதன் வரவேற்புரை!

# மயிலாடுதுறை மத்திய ஒன்றியம் திருமங்கலத்தில் நன்றி அறிவிப்பு பொதுக்கூட்டம்!

## ஆர்.எஸ்.பாரதி, சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை! !

மயிலாடுதுரை , ஜூன் 18 - மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மத்திய ஒன்றியம் திருமங்கலத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதி தேர்தலில் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணிக்கு வாக்களித்து மாபெரும் வெற்றி பெற செய்த வாக்காள பெருமக்களுக்கு நன்றி அறிவிப்பு பொதுக்கூட்டம் இன்று (18ம் தேதி) மாலை 6.00 மணிக்கு மயிலாடுதுறை மத்திய ஒன்றியம் திருமங்கலம் அண்ணாசிலை அருகே நடைபெறுகிறது.

பொதுக்கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்குகிறார். மயிலாடுதுறை மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் ஞான.இமையநாதன் வரவேற்புரையாற்றுகிறார்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி, முத்துமகேந்திரன், இராம. இளங்கோவன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, மாவட்டக் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என்.இளையபெருமாள், மூவலூர் எம். மூர்த்தி, செல்லசேதுரவிக்குமார், பி.முருகமணி, மலர்விழி திருமாவளவன், மங்கை எம்.சங்கர், பி.எம். அன்பழகன், எம்.சம்சுதீன், ஏ.ஜி.ஜெ.பிரபாகரன், பஞ்சுகுமார், அமிர்த.விஜயகுமார், கு.வைத்தியநாதன், ஏ.ஆர்.ராஜா, நகரக் கழகச் செயலாளர்கள் குண்டமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர்கள், பி.சிவதாஸ், ஹர்சத் நத்தம் ஏ.வின்சென்ட், ஜெ.கபிலன், எஸ்.சங்கரநாராயணன், எஸ்.வெற்றிவேல், எஸ்.சுவாமிநாதன், பி.கென்னடி, காந்தி, சுபா நெடுஞ்செழியன், பேரூர் கழகச் செயலாளர்கள் எம். அன்புச்செழியன், எஸ். கே.முத்துராஜா, எம்.சம்சுதீன், என்.அண்ணாதுரை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.

கூட்டத்தில் மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதியில் இந்தியா கூட்டணி காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சுதா நன்றி தொவித்து பேசுகிறார்.

கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதி முன்னாள் உறுப்பினர் செ.இராமலிங்கம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், காங்கிரஸ் கட்சி மாவட்டத்தலைவர் எஸ். ராஜ்குமார் எம்.எல்.எ., இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் ஏ.சீனிவாசன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் ஏ.சீனிவாசன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர்கள் சிவ.மோகன்குமார், தாமு.இனியவன், ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் கொளஞ்சி, இந்திய முஸ்லீம் லீக் மாவட்டச் செயலாளர் நூருல்லா உள்ளிட்ட கூட்டணி கட்சி மாவட்ட நிர்வாகிகள், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செலயாளர் ஜெக.வீரபாண்டியன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்திய சீலன், எம்.பன்னீர்செல்வம், எம்.எம்.சித்திக், ஏ.சி.என். சிவபாலன், அரசு வழக்கறிஞர் இரா.சேயோன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதி நிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கலந்து கொள்கின்றனர்.

# முன்னாள் எம்.பி. எஸ்.சிவசுப்பிரமணியன் ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி!

## அரியலூர், பெரம்பலூர் மாவட்டக் கழகத்தினர் புகழஞ்சலி செலுத்தினர்!

அரியலூர், ஜூன் 18 - அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அருகே உள்ள தேவனூர் கிராமத்தில் முன்னாள் பெரம்பலூர், அரியலூர் மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை முன்னாள் உறுப்பினரும் அரியலூர் மாவட்ட கழக செயலாளரும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சருமான சா.சி.சிவசங்கர் தந்தையுமான எஸ். சிவசுப்ர மணியன் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவ படத்திற்கு கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், சிவராஜேஸ்வரி சிவசுப்ரமணியன், சட்ட மன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன்,அரியலூர் சட்ட மன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி. பாலசுப்ரமணியன் ஆகியோர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்தார்கள்.

இந்நினைவு நிகழ்ச்சியில் எஸ்.எஸ்.சிவகுமார், மாநில ஆதிதிராவிடர் துணை அமைப்பாளர் ப.துரைசாமி, மாநில வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் வி.எஸ்.பெரியசாமி, மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சந்திரசேகர், லதாபாலு, அரியலூர் மாவட்ட ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், முன்னாள் ஒன்றிய செயலாளர் க.தருமதுரை, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், ரெ.அசோக சக்ரவர்த்தி, ரெங்க.முருகன், கோ.அறிவழகன், மா.அன்பழகன் , ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், பெரம்பலூர் ஒன்றிய கழக செயலாளர்கள் மதியழகன், சி.ராஜேந்திரன்,

நகரக் கழகச் செயலாளர்கள் வெ.கொ.கருணாநிதி, இரா.முருகேசன், பேரூர் கழக செயலாளர்கள் ப.கோபாலகிருஷ்ணன், அல்போன்ஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.பாலு, வி.எம். ஷாஜகான், சுமதி கருணாநிதி, திருமானூர் ஒன்றிய பெருந்தலைவர் சுமதி அசோகசக்ரவர்த்தி, செயங்கொண்டம் நகர் மன்ற தலைவர் சுமதி சிவகுமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜா, மாவட்ட இலக்கிய அணி தலைவர் இராமதாஸ், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கருப்புசாமி, அரியலூர் நகர்மன்ற துணை தலைவர் கலியமூர்த்தி, மாவட்ட அமைப்பாளர்கள் எஸ்.ஆர்.இராமராஜன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் செ. இளஞ்செழியன், தங்கை. எழில்மாறன், தங்க.இராமகிருஷ்ணன், விஜயலட்சுமி செல்வராஜ், பானுமதி இராஜேந்திரன், விஜய குமார், ஒன்றிய துணை செயலாளர்கள் காளமேகம், செந்தில்குமார், மாவட்ட பிரதிநிதி சிவஜோதி, இரா. சதீஷ், பெ.செல்வேந்திரன், தலைமை கழக பேச்சாளர்கள் கவிஞர் வீரமுரசு, இளஞ்செழியன், கழக வழக்கறிஞர்கள் செல்ல. மணிமாறன், எம்.ராஜா, முத்தமிழ்செல்வன், ஆ.சசிகுமார், பாலா,இளையராஜா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சுபா.ச.வசந்தபகலவன், வீர.சிவா மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டு முன்னாள் எம்.பி. எஸ். சிவசு ப்பிரமணியன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி புகழஞ்சலி செலுத்தினார்கள்.

தொடர்ந்து மாவட்டம் முழுவதும் உள்ள ஒன்றிய, நகர, கிளைக் கழகங்களில் அய்யா எஸ்.சிவசுப்ரமணியன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர், மாவட்ட பொறியாளர் அணி சார்பில் அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் அனைவருக்கும் மதிய உணவு வழங்கினார்கள்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி கொத்த மங்கலம் சாலையில் உள்ள ஈத்காமைதானத்தில் நடந்த பக்ரீத் பண்டிகையின் சிறப்பு தொழுகையில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டார்.